1005

பதிவு எண்— M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை–8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத: சித்திரை க 13–4—56 தளிர்–25



குருகுலப் பாடசாலை

மாம்பாக்கம்

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்

(28-10-55 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளிநாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | ரூ. | 0 | 1 | 0 |

ஆயுள்—

கையொப்பம் ரூ. 100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;

மதுராந்தகம் P. O.

(தென்னிந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

—புறநானூறு.


| கிளை 8 | மன்மத, 13-4-56 | தளிர் 25 |
|---|---|---|


# நாட்டின் உட் பகைகள்

உட்பிரிவுகளெல்லாம் உறுப்புகள் போல்வன; தம்முள் இணக்கமும் உடையன; நிலத்தின் உள்ளே பற்பலவாய் வேர்கள் பிரிந்திருந்தாலும், எல்லாம் ஒற்றுமையாய் ஒரு மரத்திற்கே ஊட்டந் தருவது போல ஆளுகைப் பிரிவுகள் நாட்டினுள்ளே பாய்ந்து நிகழ்ந்து நாட்டுக்கு ஆக்கந் தரும். தந்து, மரத்தின் கிளைகள் எல்லாரும் அறியும் படி வெளிப்படையாய்ப் பலவாய்ப் பிரிந்து மலர் காய் கனி முதலிய பயன்களை விளைத்தல்போல, அரசும் மக்கட் கிளைகளை வளர்த்து அவர்கட்கு வாழ்க்கை நலம் முதலிய பயன்களை விளைத்து வரும்.

நாட்டின் உட் பிரிவுகள் மக்களுக்கும் அரசுக்கும் ஒற்றுமையும் நலமும் உண்டாக்கும் உறுப்புகளாகவே இயங்குதல் முறை; கேடு விளைக்கும் பகையாதல் கூடாது.

நாட்டுப் பிரிவினைகள் மக்கள் நிலை முதலியவற்றை முக்கிய அடிப்படையாக் கொண்டிருத்தலாலும், மக்கட் கிளைகளை முன்னேறச் செய்து பயன் காண வேண்டியிருத்தலாலும் மக்கட் பிரிவுகள் எப்படியிருக்க வேண்டும் என்பதிலும் திருவள்ளுவர்க்குக் கருத்துச் செல்கின்றது.

ஆட்சிப் பிரிவுகள் ஒரு மரத்துக்கு வேர் போன்றவை என்றும், மக்கட் பிரிவுகள் கிளை போன்றவை என்றும் முன்பு பார்த்தோம்; மரம் என்பது நாடு; கிளைகளின் தழைப்பே முக்கியம்; அடிமரமும் வேரும் அத்தழைப்புக்கு ஆதாரமானவை. கிளைகள் பல பிரிவுகளாக இருத்தல் தழைப்புக்கும் பயனுக்கும் இன்றியமையாதது. அப்படித்தான் மக்கட் கிளைகள்!

மக்கள் பிரிவுகள் பெரும்பாலும், மொழியால், பழக்க வழக்கங்களால் சாதியால் மதத்தால் பிரிவுபடுதலுண்டு. இவற்றுள் சாதி என்பது முன்பெல்லாம் தொழிலால் அமைந்தது; பிற்காலத்தில் உறவு முறையால் கருதப் படுகின்றது; இப் பிற்காலக் கருத்தைச் சான்றோர் ஒப்புக்கொள்வதில்லை; மதக் கொள்கை மேலளவில் பழக்க வழக்கங்களுக்கும் உள்ளளவில் உணர்வு முன்னேற்றத்துக்கும் உதவக் கூடியது; இதுவும் பிற்காலத்தில் வாழ்க்கைக்குப் பயன்படாமல் வெறும் புற வாதத்துக்குரியதாய் வீண்பட்டமையால், இவ் வீண் நிலைமையையும் பெரியோர் ஒப்புக் கொள்வதில்லை. ஆதலால், இவற்றின் அடிப்படையில் மக்கள் பிரிவினை, நாட்டுக்கும் உண்மை வாழ்க்கைக்கும் அரசுக்கும் ஊனமாகும். உட்பகைவர் கொல் குறும்பர்களை விடச் சாதி சமயப் பல் குழுக்கள் நாட்டுக்குப் பெரிய உட்பகைகள் எனக் கருதுவர் பெரியோர். 'பல் குழுவும் உட்பகையும் குறும்பும் இல்லது நாடு' என்றார் திருவள்ளுவர்; பல் குழு என்பதற்கு, சாதி பற்றியும் கடவுள் பற்றியும் தம்முள் ஒருமைப்பாடு உண்டாக்கிக் கொள்ளும் குழுக்கள் என்னுங் கருத்தில் பரிமேலழகர் உரை கூறினர். மொழிவகையிற் பிரிவினை இங்கே வரவில்லை. அது, நலந்தரும் இயற்கையாற்றல் அமைந்தது.

---

அப்பெரியார் (இளவழகனுர்) பண் இலக்கணத்துடன் திருக்கழுக்குன்றத் திருப்பதிகங்களை இசைப்படுத்தித் தந்தால் இவ்வாண்டு மணிவாசகர் திருநாளில் வெளியிடலாம் எனப் பணித்தார்கள். அவ்வாணையைத் தலைமேற்கொண்டு திருவருளை நினைந்து வழக்கிற்கும் இலக்கணத்திற்கும் மாறுபாடு இலாவகையில் இசைப்படுத்தி ஒப்புவித்தேன்; இதனைச் சிறந்த முறையில் வெளியிட்டு அடியேனைப் பெருமைபடுத்திய அப் பெருந்தகைக்கும் எனது அன்பிற்குரிய நண்பர் ந. ரா. ஆடலரசு அவர்களுக்கும் எனையோர்க்கும் எனது உளமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்; இப் பணியில் தோன்ருத் துணையாயிருந்த திருக்கழுக்குன்றிற் செல்வராய் விளங்கும் சிவபெருமானை வாழ்த்தி இறைஞ்சுகின்றேன். பண்டைய இசைத்தமிழ்ப் பெருமையைத் தமிழ்மக்கள் அறிந்து போற்றுவார்களாக; தேவாரப் பாடல்கள் நல்ல உயர்தர இசையோடு எங்கும் ஒலிக்கப் பெறுக!

அடியார்க்கு அடியேன்,
ப. சுந்தரேசன்.

---



இப் பாடல்களில் பதிகங்களின் தலைப்பில் பண்கள் பெயர் எழுதப்பட்டிருப்பதையும் காண்கிறோம் அல்லவா! அப் பண்களின் தொகையும் 25-க்குமேல் இல்லை ஆதலால், கால வகையில் பண் பெயர்கள் மறைந்து வருவதைக் கண்டும் வாளா இருத்தல் கூடுமா?

இனி, திருஞானசம்பந்தர் பாடிய பாடல்களின் அமைந்த பண்களைப்பற்றி எண்வகையில் காண்போமாக. இவர் பாடல்கள் யாவும் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. அவை. 1, 2, 3, ஆகும்.

முதல் திருமுறையில் உள்ள பண்கள்: அ.

1. நட்டபாடை
2. தக்கராகம்
3. பழந்தக்கராகம்
4. தக்கேசி
5. குறிஞ்சி
6. வியாழக் குறிஞ்சி
7. மேகராகக் குறிஞ்சி
8. யாழ்முரி

இரண்டாந் திருமுறையில் உள்ள பண்கள் 6.

1. இந்தளம்
2. சீகாமரம்
3. காந்தாரம்
   பியந்தைக் காந்தாரம்

5. நட்டராகம்
6. செவ்வழி

மூன்றுந் திருமுறையில் உள்ள பண்கள் 9.

1. காந்தார பஞ்சமம்
2. கொல்லி
3. கொல்லிக்கவ்வாணம்
4. கௌசிகம்
5. பஞ்சமம்
6. சாதாரி
7. பழம்பஞ்சுரம்
8. புறநீர்மை
9. அந்தாளிக் குறிஞ்சி

ஆக 23 பண்களில் இப்பொதுள்ள (திருஞான சம்பந்தர் பாடல்) பாடல்கள் அமைந்திருக்கின்றன, இவைகளை ஒட்டியே. திருநாவுக்கரசர் பாடிய பாடல்களும் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்று, அவை 4. 5. 6. திருமுறை எனப்படுகிறது. இவற்றில் (4-ம் திருமுறையில்)

பண். கொல்லி
,, காந்தாரம்
,, பியந்தைக் காந்தாரம்
,, சாதாரி
,, காந்தார பஞ்சமம்
,, பழந்தக்கராகம்
,, பழம்பஞ்சுரம்
,, இந்தளம்



தது எனவே கொள்ளுதல் மிகப் பொருந்தமுடையதாகும். ஆதலால் இக்காலம் நம் பழைய சங்கநூல்களிலிருந்தும் ஆராய்ச்சியாளர் பலர் எழுதிய சில நூல்களிலிருந்தும் இசைத்தமிழின் நீர்மையினை நன்கு அறிந்தால், (பழைய தமிழ் மரபிற்கேற்ப) நம் தேவாரப் பாடல்களை நல்ல முறையில் நாட்டில் எல்லாரும் பாடி மகிழலாமல்லவா? இடைக்காலக் குறைபாடும் நீங்குமல்லவா? நாமும் பெரியோர்களாற் போற்றப்படுவோமல்லவா?

இம்முறையில் அடியேனது சிற்றறிவினால் சிறிது காலமாக ஆராயத் தொடங்கிப் பல உண்மைகளை விளக்கிக் கொண்டு வருவதால் எல்லாம் திருவருள் துணையால் ஏற்படக் கூடியவை என ஏதோ எண்ணிவருகின்றேன். நிற்க.

கடந்த 2-5-55 முதல் 27-5-55 வரை தம் மாணவர்கள் இருநூற்றுவருடன் கீழைச் சோணாட்டுத் திருத்தலங்களை வழிபட வந்த சிவநெறிச் செல்வரும் சிறந்த பேரறிஞருமான மாம்பாக்கக் குருகுலத் தலைவர் சிவப்பெருந்திரு. இள வழகனார் அவர்களைத் தமிழ்நாட்டில் பல இடங்களில் காணும் வாய்ப்புப் பெற்றேன். இவ்வாண்டில் அவர்களுடன் பலதலங்களுக்குச் சென்று வழிபடும் பெரும் பேறு பெற்றமையால், திருக்காறுயில் எனும் தலத்தில் அவர்கள் முன்னிலையில் திருவாரூர் இராசன் கட்டளை மௌன சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் தலைமையில் தேவார இசைபற்றி ஒரு சிறு சொற்பொழிவும் செய்ய வாய்ப்புக் கிடைத்தது, அக்காலை

எனக் கூறப்பட்டனர் என எண்ணவும் இடமுண்டு.

இவர்கள், (ஓதுவார்கள்) இக்காலம் வரை நம் பழையதேவாரப் பாடல்களைப் பண் முறையில்பாடிவருவதற்கு நாம் எல்லாரும் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்? இவர்களும் இத் தொழிலினைக் கைவிட்டிருந்தால் இக்காலம் ஒன்றுமே விளங்காதநிலை ஏற்பட்டிருக்குமல்லவா? இருந்தபோதிலும் தற்கால வழக்கில் தேவாரப் பாடல்களைச் சிலர் சற்றுப் பழைய முறையில் பாடுவோரும்உண்டு. முழுதும் புதிய வகையில் பாடுவோரும் பலர் உண்டு. கால வகையில் நன்றாகப் போற்றிப் பாதுகாப்பதும் நம்மவர் கடமை என்பதில் மறுப்பேதும் இல்லை. ஆனால் தேவாரப் பாடல்கள் பழைய பண்முறையைச் சேர்ந்தது என்பதில்யாருக்கும்ஐயப்பாடு இல்லையே?. ஆகையினாலே பழைய பண்முறை எது என்பதனை இலக்கிய முறையிலும் இலக்கண முறையிலும் ஆராய்வது நற்செயலேயாகும் எனப் பெரியோர்கள் கூறுவது உண்மையல்லவா? நிற்க,

கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டிற்குமுன் இருந்த தமிழக இசை மரபே ஞானசம்பந்தர் காலத்திற்குப் பிந்தியது என நன்கு அறியப்படுவதால் இதற்கு முன்னிருந்த இசை மரபு ஒன்றுதான் தேவாரப் பாடல்களினுடையதாக இருந்திருத்தல் கூடுமென நன்கு உணரலாம். மேலும், ஞானசம்பந்தர் தம்மைத் தமிழ்ஞான சம்பந்தன் எனக் கூறுவதிலிருந்தும் அவரது இயல்வகையோ, இசைவகையோ பொதுவாகத் தமிழ் வழியைச் சார்ந்



,, சீகாமரம்
,, குறிஞ்சி

என்ற பத்துப் பண்களிலும் பாடல்கள் அமையப்பெற்றுள்ளன. இவைகளையடுத்துச் சுந்தரர் பாடிய பாடல்கள் ஒரு திருமுறையாகத் தொகுக்கப்பெற்று ஏழாந் திருமுறை எனக் கூறப்படுகிறது இத் திருமுறையிலும்

பண். இந்தளம்
,, தக்கராகம்
,, நட்டராகம்
,, கொல்லி
,, கொல்லிக் கவ்வாணம்
,, பழம்பஞ்சுரம்
,, தக்கேசி
,, காந்தாரம்
,, பியந்தைக் காந்தாரம்
,, காந்தார பஞ்சமம்
,, நட்டபாடை
,, புறநீர்மை
,, சீகாமரம்
,, குறிஞ்சி
,, கௌசிகம்
,, செந்துருத்தி
,, பஞ்சமம்

என்றபதினேழு பண்களிலும் பாடல்கள் அமைந்துள்ளன. மற்ற இருவர் பாடலில் இல்லாத செந்துருத்தி என்ற பண் சுந்தரர்

பாடலில் மட்டுமே உள்ளது. இது ஒரு தனிச்சிறப்பு. இதனுல் நாம் பண்டைய இசைத் தமிழ் வழியில் எழுந்த பண்களிலேதான் நம் அருமையான தேவாரப்பாடல்கள் அமைந்துள்ளன என்பதை நன்கு அறிகின்ருேமல்லவா? இனி, இப் பாடல்கள் நம் நாட்டில் வழக்கில் பாடப்பட்டது பற்றியும் சிறிது கூறவேண்டும் என எண்ணுகின்றேன்.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் காலத்திற்குப் பின்வந்த திருநாவலூரார், (சுந்தரர்) இந்த மூவர்கள் காலத்திற்குப் பின் சில நூற்ருண்டுகளில் தமிழ் நாட்டில் ஆங்காங்கு ஏதோ சில இடங்களில் அவ்வவ்விடங்களுக்குரிய சில பாடல்கள் பாடப் பெற்றனவே அன்றி எல்லாப் பாடல்களையும் ஒருங்கே பாடும் வாய்ப்புக் கிட்டவில்லை என்பதும் நமது திருமுறை கண்ட புராணத்தால் தெரிய வருகிறது. அக்காலந்தான் திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பி தோன்றியதும், அவர் பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்றதும், அக்காலம் சோழப் பேரரசனுக விளங்கிய இராசராச மன்னன் தில்லையில் ஓர் அறையில் சில நூற்ருண்டுகளாக அடைப்பட்டுக் கிடந்த திருப்பதிகங்களை யெல்லாம் நம்பி மூலம் வெளிப்படுத்தினன் என்பதும் சிவநெறிப் பெருமக்கள் அறிவார்கள்.

இவ்வாறு வெளிப்படுத்திய திருப்பதிகங்களை யெல்லாம் இசைவல்ல பாடினியார் ஒருவரால் பண் முறையில் அமைக்கச்செய்து. பல பிடாரர்களைக் கொண்டு ஆங்காங்குள்ள சிவனுறையும் கோயில்களில் வழிபாட்டுக்காலத்தில் பாடச் செய்த பெருமையும் அந்த இராராச மன்னனுக்கே உரியதாகும். இவர் காலத்தில் திருப்பதிகம் பாடுவோர் பிடாரர் எனப்பட்டனர். இக்காலம் கி. பி. பத்தாம் நூற்ருண்டாகும். இதற்குப்பின் இரண்டு நூற்ருண்டுகள் தமிழ் நாட்டில் திருப்பதிகங்கள் நன்கு பாடப் பெற்று வந்திருக்க வேண்டும். இசைத்தமிழ்ப் பெருமையும் நாட்டில் நன்கு போற்றப்பட்டிருக்கவேண்டும்.

பிறகு பதின் மூன்றும் நூற்ருண்டில் இருந்து தமிழ் நாட்டில் எல்லாத் துறைகளிலும் வேற்றவர் வந்து புகுந்தமையினுலே பழைய பண்களின் பெயர்களும் மாற்றப்பட்டு இசைமுறைகளும் வடமொழியில் எழுதப்பெற்று வந்தமையால் பழைய பண்முறையோடு பாடப்பெற்ற திருப்பதிகங்கள் கோயில்களில் மட்டும் பாடப்பெறுவது வழக்காய் நின்று காலவகையில் பாடுவோர்களின் பயிற்சிக் குறைவால் சிறிதுசிறிதாக மங்கிவரலாயிற்று எனக் கூறலாம். ஆலயங்களில் வேத பாராயணம் நன்கு பரவவே நம் தமிழ்ப் பதிகங்களையும் குறிப்பிட்ட ஒரு சாரார் தமிழ் வேதம் எனக் கூறி ஓதி வரலாயினர். இவர்களே முதன்முதலில் திருப்பதிகங்களை இசைப்பண் முறையினின்று ஒதுக்கி ஏதோ ஒருவகை ஒலியோடு ஓதி வந்தவராவார் எனவும் கூறலாம். இவர்களைத்தான் ஓதுவார் எனக் கூறினர். இக் காலம் முதல் திருப்பதிகங்களைப் பாடுவோர் ஓதுவார்

# அரிஸ்டாடில் கருத்துக்கள்

**நல்லவை;**

நல்லவை எவை? ஒரு பொருளை நாம் அதன் பொருட்டே விரும்பினால் அது நல்லது; அனைவரும் விரும்பும் பொருள் நல்லது; எல்லா நற்குணங்களும் நல்லவை; அழகும் வலிமையும் புகழும் ஆற்றலும் நீதியும் நல்லவை; வாழ்க்கையே நல்லதுதான்.

**பண்பும் நீதியும்:**

நல்ல கருத்துக்களை ஏற்றுக்கொண்டு அவற்றை நம்மிடமே நிலைபெற்றிருக்கச் செய்வதுதான் நற்பண்பு.

ஒவ்வொரு மனிதனும் சட்டப்படி தனக்கு உரியதைப் பெறுவதற்கு வகை செய்யும் நற்பண்பே நீதி.

**ஒழுக்கமும் புகழும்:**

ஒழுக்கக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்தால் புகழ்மொழி உண்டாகிறது. எடுத்துக் காட்டு; 'இந்தச் செயலைச் செய், ஏனெனில் அது நல்லது' என்பது ஒழுக்கக் கோட்பாடு; 'அவன் நல்லவன், ஏனெனில் அவன் இன்ன செயலைச் செய்தான்' என்பது புகழ்மொழி.

**பெருந் தன்மை:**

பெருந் தன்மை என்பது என்ன? தமக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கோ தீமைகளுக்கோ கடுமையாகத் தண்டனை அளிக்காமலிருப்பது; மனிதன் பொதுவாகச் செய்யக்கூடிய சிறு தவறுகளை மன்னித்துவிடுவது; சட்டத்தின் உயிர்ப்பை மட்டும் உணர்ந்து கொண்டு எழுத்துக்கு எழுத்து ஊன்றிப்பார்க்காமல் இருப்பது; தமக்கு இழைக்கப்பட்ட இன்னலை மறந்து நன்மையையே நினைவில் கொள்வது; பொறுமையுடன் துன்பங்களைப் பொறுப்பது ஆகியவை பெருந் தன்மைக்கு அடையாளங்கள்.

**நல்லோர்:**

நடந்ததை நினைத்து இரங்குவதற்கான செயல்களைச் செய்யாதவனே நல்ல மனிதன்.

நல்ல மனிதர்களின் யோசனைகள் நிலைபெற்றவை; நதிப் பெருக்கைப் போல இவை உயர்ந்து தணிவதில்லை. நேர்மையானதும் தகுதியானதுமான செய்கைகளையே அவர்கள் விரும்புவார்கள்

கல்வியும் நன்னடத்தையுமே ஒருவனை நல்லவனாக்குகின்றன.

இயற்கையும் மரபுகளும் சிந்தனையாற்றலுந்தாம் ஒருவனைச் சிறந்தவனாகவும் பண்புள்ளவனாகவும் உயர்த்துகின்றன.

நமக்கு நன்மை கிட்டும்போது மகிழ்ந்து தீமை வந்தபோது வருந்துபவர் நண்பர். நம் பகைவர் அவர்களுக்கும் பகைவர்; நமக்கு நண்பர் அவர்களுக்கும் நண்பர்.

வாழ்க்கையில் எதிர்ப்படுந் துன்பங்களைச் சமாளிப்பதற்கு நண்பர்களே உற்ற துணை. சிறுவயதினரை அவர்கள் துடுக்குச் செய்யாமல் தடுக்கிறார்கள். வயது சென்றவர்க்கு இதமளிக்கும் துணைவர்களாக இருக்கிறார்கள். வாழ்வின் வசந்தத்தில் இருப்பவர்களை உயர்ந்த செயல்கள் செய்யுமாறு தூண்டுகிறார்கள்.

தாராள மனப்பான்மைக்கு முதலில் நமக்கு நீதி மனப்பான்மை வேண்டும். நம் நண்பனுக்குப் பண உதவி செய்யுமுன், உள்ள கடனைத் திருப்பித் தருவதுதான் முறை.

**விசித்திர மனிதர்:**

உலகத்தில் இரண்டு விதமான விசித்திர மனிதர்களைப் பார்க்கலாம். ஒரு வகையினர் தம்மிடம் பிறர் என்ன சொன்னாலும் தலையாட்டுவார்கள்; தமதென்று ஒரு கருத்தும் அவர்களுக்கு இராது. மற்றொரு வகையினர், பிறர் மன உணர்ச்சிகளைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் எதையும் எதிர்த்துக் கூறுவதே தமது தொழிலாகக் கொண்டிருப்பவர்கள்.

**இன்பமும் இன்பமல்லாததும்:**

இயற்கையான பொருள்களின் மீது ஆன்மாவுக்

குத் திடீரென்று ஏற்படும் பொருத்தமுள்ள ஏற்பாட்டையே நாம் இன்பம் என்று சொல்லுகிறோம். செய்தாக வேண்டும் என்ற கட்டாயத்தின் பேரிலும் இன்றியமையாமையை யொட்டியும் எழுவன இன்பமற்றவை; எடுத்துக் காட்டு; நிதிப் பொறுப்பு ஏற்றல், பாடம் படித்தல் போன்றவை.

இயற்கை முறைமைக்கு மாறுபட்டுள்ளவைகளை 'அநீதி' என்று எல்லா மக்களும் கருதுவார்கள்.

கடவுள்:

எல்லாப் பொருள்களிலும் இறைவன் கூறு கலந்திருக்கிறது.

எல்லாவற்றிற்கும் புறம்பானதொரு வல்லமைதான் எல்லா உலகுகளையும் படைத்தது. அப்படிச் செய்யும்போது, நேர் எதிரான இயல்புகளை, அது இணையுமாறு செய்து அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கியிருக்கிறது.

கடவுளுக்குப் பொதுவாக உருவமில்லை; வரம்பிலா உரிமையும் நிலையும் சிறப்பும் பெற்றவர் அவர்! நம் கண்களுக்குத் தெரியாத அவரை அவர் செயல்களின் மூலமே நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

## திருக்கழுக்குன்றத்தில்
# திருவடி மண்டபம்

சைவப் புரவலரும் சிவபூசைச் செல்வருமாகிய தேவகோட்டை சைவத்திரு மெய்யப்ப செட்டியார் அவர்கள் திருவடி மணி மண்டபத்துக்குக் கால்கோள் செய்தார்கள், அவ்வாண்டில் திருப்பெருந்துறை வரையில் தலயாத்திரை செய்துவந்த குருகுலத்தார் நேரே திருக்கழுக்குன்றம் வந்து அவ்விழாவை நடத்தினர்.

மணி மண்டபத்துக்கு நூறாயிர ரூபா செலவுத் திட்டத்தில் கட்டிட அமைப்புப் படம் அமைக்கப் பெற்றது. சென்னை இந்துமத அறநிலையத்தாரும் திருக்கழுக்குன்றம் திருக்கோயில் தலைவர்களும் அதனை அங்கீகரித்து, மண்டபம் அமைக்க உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

இனி, மணிமண்டபம் எழுதல் வேண்டும். அன்பர்கள் இத் திருவருட் பணியில் ஊக்கங் கொண்டு நலம் புரியலாம். இத் திருப்பணி விரைந்து நிறைவேறுதற்கு அது, உதவியாயிருக்கும்.

திருவடி மண்டபம், அன்பர்கள் அமைதியாக இருந்து அகமுக வழிபாடு செய்வதற்குப் பெரிதும் உதவியாயிருக்க வேண்டும். அதற்கு, அம் மண்டபத்தில் திருவடி வழிபாடு செய்வதற்கும், தியாந முகத்தில் உதவுதற்கும் தக்கோர் அங்கு அமைதலும் வேண்டும். அன்றாட வழிபாட்டுக்குரிய பொருள்களும் தேவை.

மேலும், திருவடி நுட்பம் முதலிய திருவருள் உண்மைகளைச் சிற்சில சிறப்புக் காலங்களிலாவது மக்களுக்கு விளக்கித் தெளிவு செய்யும் நல்லோர் விரிவுரைகளும் அறிவு விழாக்களும் நிகழ்தல் இன்றியமையாதது.

இத்தகைய ஆட்சிச் செலவுகளுக்கேற்ற வைப்பும் முக்கியம். அமைப்புச் செலவு ஒரு பங்கானல், ஆட்சிச் செலவு அதனினும் பன்மடங்காகும்.

எல்லாம் வல்ல இறைவன் திருவருளாலும் உருக்க மிக்க அன்பர்கள் நன்னினைவாலும் துணையாலும் இச் சிறந்த திருப்பணிகள் இனிது நிறைவேறுதல் வேண்டும்; திருக்கழுக்குன்றத்தின் திருவருளொளி நாட்டு நல்லோர்க்குப் பரவிப் பயன் விளைக்குமாக!

—குருகுலத்தார்.

**Phone. 55034 Tel. Enkayam**

**கைத்தறி ஆடைகளில்**

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்




**பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர், 53. கிடங்குத் தெரு. சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)